# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2217/37 - 2021 මාර්තු මස 05 වැනි සිකුරාදා - 2021.03.05

*2217/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி செய்தல் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபை**

(136 ஆம் அதிகாரமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம், தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் நிறைவேற்றப்பட்டு கௌரவ தொழில் அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

இத்தீர்மானம் 2021, மாச்சு 05 ஆந் திகதி முதல் செல்லுபடியாதல் வேண்டும்.

**எம். பீ. டீ. யூ. கே. மாபா பத்திரண,**
செயலாளர்,
தொழில் அமைச்சு.

“மெஹெவர பியச”,
கொழும்பு 05,
2021, மாச்சு 03.

அட்டவணை

தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் உருவாக்கப்பட்ட 1945, யூலை 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலில், அட்டவணையில் விபரமாகத் தரப்பட்டுள்ள, அவ்வப்போது மாற்றப்பட்ட இறுதியாக 2014, யூலை 24 ஆந் திகதிய 1872/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட

அறிவித்தல் மூலம் மாற்றப்பட்ட தீர்மானங்களின் II ஆம் பிரிவின் குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு சார்பாக கீழ்க்காணும் பிரிவு புதிதாக பிரதியீடு செய்யப்பட்டு மேலும் மாற்றப்படல் வேண்டும்.

II ஆம் பிரிவு

காலத்தை அளவிடும் வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய-

(i) குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு (தொழிலாளர்கள்) - ரூ. 900.00
(ii) வரவுசெலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவு - ரூ. 100.00

03-571/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் நடுதல் மற்றும் பொது இறப்பர் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபை**

(136 ஆம் அதிகாரமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம், இறப்பர் நடுதல் மற்றும் பொது இறப்பர் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் நிறைவேற்றப்பட்டு கௌரவ தொழில் அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட மேற்படி தீர்மானங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

இத்தீர்மானம் 2021, மார்ச்சு 05 ஆந் திகதி முதல் செல்லுபடியாதல் வேண்டும்.

**எம். பீ. டீ. யூ. கே. மாபா பத்திரண,**
செயலாளர்,
தொழில் அமைச்சு.

"மெஹெவர பியச",
கொழும்பு 05,
2021, மார்ச்சு 03.

அட்டவணை

இறப்பர் நடுதல் மற்றும் பொது இறப்பர் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் உருவாக்கப்பட்ட 1949, நவெம்பர் 25 ஆந் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலில், அட்டவணையில் விபரமாகத் தரப்பட்டுள்ள, அவ்வப்போது மாற்றப்பட்ட இறுதியாக 2014, செத்தெம்பர் 20 ஆந் திகதிய 1881/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் மாற்றப்பட்ட தீர்மானங்களின் II ஆம் பிரிவின் குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு சார்பாக கீழ்க்காணும் பிரிவு புதிதாக பிரதியீடு செய்யப்பட்டு மேலும் மாற்றப்படல் வேண்டும்.

II ஆம் பிரிவு

காலத்தை அளவிடும் வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய-

(i) குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு (தொழிலாளர்கள்) - ரூ. 900.00
(ii) வரவுசெலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவு - ரூ. 100.00

03-571/2

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.